செங்கோல்

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

மலர் 12 ★ சென்னை 14-1-62 ஞாயிறு 30 பைசா ★ இதழ் 7

உரிமைப் பொங்கல்!

(கு. மா. பாலசுப்பிரமணியம்)

மண்ணிலே வியர்வை சிந்தி
மாடுபோல் பாடுபட்டுச்
செந்நெல்லை விளைத்த மக்கள்
சிந்தும் நெல் மணிபொறுக்கி
எண்ணிலாத் துயரளைந்து
இடையருப் பசி கலந்து
கண்களின் நீர் சொரிந்து
கவலையைப் பொங்கும்போது,
அன்னியர் உழைப்பை யெல்லாம்
அள்ளியே கொள்ளை கொண்டு
கன்னலும் கதலியோடும்
கற்கண்டுப் பொடியி னேடும்
பண்ணையார் மெத்தைவீட்டில்
பாற்சோறு பொங்கியுண்ணும்
வன்மனக் கொடுமை மாற்றி
வாழ்கநம் உணர்வுப் பொங்கல்!

மனத்தினுல் சுயநலத்தை
மதித்திடாத் தூய்மையான
குணத்தினுல், தியாகத் தீயில்
குதித்திடத் தயங்காநெஞ்சத்
திறத்தினுல் பண்டைத் தொண்டர்,
தேசத்து மக்களெல்லோர்
கருத்திலும் பதவி பெற்ற
கண்ணியம் மாறி, இன்றே
பணத்தினுல், சாதி என்னும்
பலத்தினுல், மறைவில் அற்பத்
தனத்தினுல் தேர்தல் வேட்டைக்
களத்திலே பதவி தேட
நினைந்திடும் புதுமை கண்டோம்!
நெறியிலாப் பதரைத் தோல்வி
வனத்திலே ஓட்டுதற்கே
வாழ்க நம் பண்புப் பொங்கல்!

சொல்லவும் நாவினிக்கும்
சுதந்திரம் காண இங்கே
உள்ள பற் பல மொழிக்கும்
உரிமை கொள் இனங்களெல்லாம்
தொல்லையில் பங்குகொண்டு
துணிவுடன் போர்புரிந்தே
வெள்ளையர் ஆதிக்கத்தை
வீழ்த்தினேம். ஆனுல் இன்றே,
டெல்லியார் ஆதிக்கத்தை
மெல்லவே ஊன்றுதற்குச்
சொல்லிலே "ஒருமைப் பாடு"
சுவைபடப் பேசுகின்றுர்!
அல்லல்கள் இனியும் ஏற்றும்
ஆட்சியின் உரிமை மீட்க
வல்லமை தமிழர் நெஞ்சில்
வாழ்க நம் உரிமைப் பொங்கல்!



சுதந்திரா–தி.மு.க. உடன்பாடு முறிய பிரதான காரணம் என்ன?

சுதந்திரா–தி. மு. க. தொகுதி உடன்பாடு முறிந்து விட்டது! இந்தச் செய்தியைப் பத்திரிகையில் படித்தபோது நான் வியப்படையவில்லை. உடன்பாடு ஏற்பட்டதாகச் செய்தி வெளியானதே, அதைப் படித்தபோதுதான் வியப்புற்றேன்.

தொகுதி உடன்பாடு பற்றிப் பேசுவதற்கு முன்பே குறைந்த பட்ச அளவிலேனும் கொள்கை உடன்பாடு காண இரண்டு கட்சிகளும் முயற்சி செய்திருக்க வேண்டும். அதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்றால், தொகுதி உடன்பாடு காணவும் சந்தித்திருக்கக்கூடாது. ஏனெனில், அது வெற்றி பெறாது.

ஒரு சில தொகுதிகளைப் பற்றிய தகராறின் விளைவாகவே உடன்பாடு முறிந்துவிட்டதாகப் பத்திரிகை செய்தி கூறுகிறது. இது, மக்களுடைய பரிகாசத்திலிருந்து தப்புவதற்காகச் சொல்லப்பட்ட போலிக் காரணம். உண்மையில், தகராறு மூன்று தொகுதிகளைப் பற்றியதுதான் என்றால், அதற்காக உடன்பாட்டை முறித்தது அரசியல் பண்பாடன்று. 205 தொகுதிகள் விஷயத்தில் சமரசம் காணும் உடன்பாட்டை, 3 தொகுதிகளில் ஏற்பட்ட தகராறுக்காக உடைத்துவிடுவதா? அப்படியும் அந்த மூன்று தொகுதிகளில் சம்பந்தப்பட்ட அபேட்சகர்களில் எவரும் கட்சித் தலைவரோ, பிரதான தலைவர்கள் பட்டியலில் சேரும் தகுதி யுடையவர்களோ அல்லர். மூன்று தொகுதிகளில் உடன்பாடு ஏற்பட வழியில்லையானால், அங்கெல்லாம் பிரசார போட்டியை இருதரப்பாரும் காங்கிரஸ் பக்கம் திருப்பிவிட்டு, தங்களுக்குள் பகை வராமல் தடுத்து, மற்ற தொகுதிகளுக்கான உடன்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கலாமே!

ராஜாஜியைப் பொறுத்தவரையில், மூன்று தொகுதிகளில் ஏற்பட்ட தகராறுக்காக உடன்பாட்டை முறித்துவிடும் அளவுக்குச் சென்றிருக்க மாட்டார். இதனிற் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத வேறு ஏதோ ஒரு சங்கடமும் அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

அதுபோலவே, எத்தனையோ தோழர்கள் வெளியேறிய போதெல்லாம் கவலைப்படாத திரு. அண்ணாதுரை மூன்று தொகுதிகளில் தம்பிமார்களைக் கைவிடுவதற்காகக் கவலைப்பட்டார் என்பதும் அதற்காக தி.மு.க. வின் வெற்றிக்கான வாய்ப்பைக் குறைத்துக் கொள்ளும் அளவுக்கு சுதந்திரா–தி. மு. க. உடன்பாட்டை முறித்து விட்டார் என்பதும் உண்மை அல்ல. அவருக்கும் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத ஏதோ ஒரு சங்கடம் உள்மனத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ராஜாஜிக்கும் அண்ணாத்துரைக்கும் ஏற்பட்ட சங்கடம் அவர்கள் வெளியிடாமலே நாம் புரிந்து கொள்ளக் கூடியது தான். பிராமணரான ராஜாஜியோடு உறவு கொள்வதிலே தி. மு. கழகத் தலைவருக்கு சங்கடமிருந்தது. அது அவருடைய பூர்வ வினையைப் பொறுத்தது! பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியை அண்ணாத்துரை கைவிட்டிருக்கலாம் தன் கட்சியின் வெற்றியைக் கருதி. அது வரவேற்கத் தக்க ராச தந்திரம்தான்—ஆனால் அவர் தன்னைக் கடந்த முப்பதாண்டுகளாக மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்திக் கொண்ட விதம், தன்னைப் பின்பற்றும் தம்பிமார்களைத் தயாரித்த போக்கு ராஜாஜியோடு வெளிப்படையாக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு எதிரானவை.

இதைத்தான் ராஜாஜி–அண்ணாத்துரை ஒப்பந்தத்தை உடைப்பதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தியது திராவிடர் கழகம். திரு. அண்ணாத்துரையோ, திராவிட முன்னேற்றக் கழகமோ ஆரிய எதிர்ப்பு மாயையிலிருந்து முற்றிலும் வெளியேறி விட்டதாகத் தெளிவாகப் பிரகடனம் செய்ய வில்லை. பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வகுப்புவாத அரசியல் தத்துவச் சூழ்நிலையில் தேவைப்படும் என்றேனும் நண்பர் அண்ணாத்துரை ஐயத்திற்கிடமின்றி அறிவித்திருக்கலாம். அப்படியும் அவர் செய்யவில்லை.

'தமிழன்'

இத்துறையில் அவரிடமுள்ள குழப்ப மனப்போக்கு தான் சுதந்திரா– தி. மு. க. உறவுக்குத் தடைக்கல்லாக இருக்கிறது. திராவிடர் கழகமும் அவரைப் பந்தாடுகிறது!

வகுப்புவாத ரீதியில் எத்தகைய கட்டுப்பாடும், கடந்த கால கர்மவினையும் ராஜாஜிக்கு இல்லாமையால் அவர் தாராளமாக அண்ணாத்துரையை அணுகினார். ஆனால், அண்ணாத்துரையின் பூர்வவினை ராஜாஜியையும் கெடுத்து விட்டது.

திராவிடத் தனிநாடு கோரிக்கையைத் தனது தேர்தல் அறிக்கையில் தி. மு. கழகம் சேர்த்து விட்ட பிறகு, அதனோடு சுதந்திரக் கட்சி தொகுதி உடன்பாடு செய்து கொள்வதை வடக்கே உள்ள சுதந்திராக்கள் விரும்பவில்லை. தொகுதி உடன்பாடு ஏற்பட்ட சிலமணி நேரங்களுக்குள் சுதந்திராக் கட்சியின் வட்டாரத்துக்குள்ளேயே அந்த உடன்பாட்டிற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது.

ஆகவே, தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பிலிருந்து, தங்களையும், தங்கள் கட்சிகளையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டே தொகுதி உடன்பாட்டை, அது எழுதப்பட்ட மை உலருவதற்குள்ளேயே உடைத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ராஜாஜிக்கும் அண்ணாத்துரைக்கும் ஏற்பட்டு விட்டது.

பிறப்பு பிரிவினைக் கொள்கை ஆகிய வேற்றுமை காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் ஒருபுறமிருக்க, உடன்பாடு காண எண்ணங் கொண்டு விட்ட பிறகு அதற்கேற்ற பண்புடன் தி. மு. கழகம் நடந்திருக்க வேண்டும். அதாவது, ராஜாஜியோடு கலந்து பேசுவதற்கு முன்பு தி.மு. கழக அபேட்சகர்களின் முதற்பட்டியலை திரு. அண்ணாத்துரை வெளியிட்டிருக்கக் கூடாது. அப்படி வெளியிட்டது அவர் செய்த முதல் தவறு.

பின்னர், சுதந்திராக் கட்சியுடன் தொகுதி உடன்பாடு கண்டுவிட்ட பிறகு, உடன்பாடு எழுதப்பட்ட இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளேயே அதனைத் திருத்த முயன்றது மற்றொரு பெருந் தவறு.

பாவம்! ராஜாஜியுடன் பழகி அறியாதவர் அண்ணாத்துரை! தன் கவுரவத்திற்குக் குறைவேற்படும் வகையில் ராஜாஜி யாருக்கும் வளைந்து கொடுக்க மாட்டார் என்பது அண்ணாத்துரைக்குத் தெரியாத விஷயம். அப்படி வளைந்து கொடுக்கக் கூடியவராக இருந்தால் திரு. அண்ணாத்துரையிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகுமளவுக்கு ராஜாஜியின் அரசியல் வாழ்க்கை மாறுதலடைந்திருக்க முடியாது.

சுயமரியாதை இயக்கத்தின் தளபதியாக இருந்த நண்பர் அண்ணாத்துரை ராஜாஜியின் சுயமரியாதை உணர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்.

தி. மு. கழகத்தின் உள்நோக்கை நன்கு உணர்ந்துங் கொண்டவர்கள், அதனோடு ஒப்பந்தம் பேச முற்பட மாட்டார்கள். ஆம்; தி. மு. கழகத்தின் உள்நோக்கை உணர்ந்து கொள்ளத் தவறியதாலேயே அதனோடு தொகுதி உடன்பாடு காண பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் ராஜாஜி.

● எவ்வளவுக்கு அதிகப்படியான தொகுதிகளைக் கைப்பற்றிவிட வேண்டுமென்று தி. மு. க. விரும்புகிறதோ, அதேபோல, எவ்வளவுக்கு அதிகப்படியான வாக்குகளைச் சேகரித்துவிட முடியுமோ அவ்வளவையும் சேகரித்து விடுவதில் அந்தக் கழகம் அக்கறை கொண்டிருக்கின்றது. ஆம்; தனக்குப் போடப்படும் ஒவ்வொரு வாக்கும் திராவிட நாட்டுப் பிரிவினைக்குக் காட்டப்படும் ஆதரவு என்று பிரச்சாரம் செய்ய வேண்டுமல்லவா?

● இந்தத் தேர்தலில் இல்லாவிட்டாலும் வருங்காலத்திலேனும் இம்மாநிலத்து ஆட்சியைக் கைப்பற்றிவிட முடியுமென்று தி. மு. கழகம் நம்புகின்றது. அதனுல், தான் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லாத தொகுதிகளிலும், வருங்காலத்திற் கேனும் வாய்ப்பு ஏற்படும்படிச் செய்வதற்காக அது போட்டியிட விரும்புகிறது.

● தொகுதிவாரி – தேர்தலில் வெற்றி பெறுவதற்கான தகுதியைப் பெற –தலைவர்களை உற்பத்தி செய்யும் உள்நோக்கம் இருப்பதால், தோல்வியை எதிர்பார்க்கும் தொகுதிகளிலும் போட்டியிட வேண்டிய கடமை தி. மு. கழகத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

● இதெற்கெல்லாம் மேலாக, தான் உடனடியாகப் பிடிக்க வேண்டிய இடம் ஆட்சிபீடமல்ல எதிர்க்கட்சி பீடத்தைத் தான் என்பதனை மற்ற எதிர்க்கட்சிகளைவிட தி. மு. கழகம் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறது. ஆகவே, காங்கிரசுடன் தனக்குள்ள போட்டியைவிட எதிர்க்கட்சிப் பீடத்தைப் பிடிப்பதற்காக மற்ற கட்சிகளோடு தான் நடத்த வேண்டிய போட்டி தான் கடுமையாக இருக்கவேண்டும் என்பதை தி. மு. கழகம் தெரிந்து வைத்திருக்கிறது. சட்டசபைக்கு வெளியே மற்ற கட்சிகளை விட தான் பல சாலியாக இருந்தாலும் சட்டசபைக்கு உள்ளே அது 'நோஞ்சான்' கட்சிதானே?

இது வரை சொன்ன காரணங்களால், மற்ற கட்சிகளோடு திறந்த மனதோடு சமரசம் பேசி நல்லெண்ணம் காட்டி உடன்பாடு செய்து கொள்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையில் நண்பர் அண்ணாத்துரை இல்லை.

இந்த நிலையில் அவருடன் பேசி உடன்பாடு காணமுயலும் எந்தக் கட்சிக்கும் கம்யூனிஸ்ட்–சுதந்திராக் கட்சிகளுக்குக் கிடைத்த அனுபவம்தான் கிடைக்கும்.

சுதந்திரா–தி.மு.க. உடன்பாடு நிலைத்திருந்தால் தேர்தலில் காங்

14-ம் பக்கம் பார்க்க

இனித்த பொங்கல்

(சு. வேங்கடராமன் பி. ஏ.)